குறள்நெறி

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:113 -ஆவணி - 16--தி.பி.2056 செபுத்தம்பர்—1--- பொ.ஆ.2025

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

அரசுத்திட்டத்திற்கு ஆதரவு திரட்டவிருந்த
பேராசிரியர் இலக்குவனாரைக் கைது செய்ய என்ன நியாயம்?
மதுரைக் கூட்டத்தில்
தமிழக எதிர்க்கட்சித் துணைத் தலைவர்
தமிழவேள் மு. கருணாநிதி கேள்வி



மதுரை மே, 3:

'முரசொலி' 5—5—'65

சென்னையில் கலைஞர்

சென்னை, மே 7.

'முரசொலி' 9-4-'65

குறள் நெறி 10 15—5—65

பக்தவத்சலனார் ஆட்சி பதிலளிக்க வேண்டும்

சிலம்புச்செல்வர்



ம. பொ. சிவஞானம்
தலைவர், தமிழரசுக் கழகம்.


பேராசிரியர் இலக்குவனாரை விடுதலை செய்யத் தமிழரசுக் கழக வேண்டுகோள்

குறள் நெறி 12 15—5—65

மொழி உரிமைப் போராளி இலக்குவனாரின் 52-ஆம் நினைவாண்டு

1973 செபுத்தம்பர் 3இல் நம்மைப் பிரிந்தார்

தமிழியக்கத்தைத் தம் உயிரியக்கமாக்கி வாழ்ந்தவரை நாம் மறக்கலாமா?



தமிழ் நலன் காக்க வாழ்நாளெல்லாம் உழைத்த இலக்குவனாருக்குத் திருவுருவச்சிலை நிறுவப் பலகாலம் பல பெரியோர் தமிழ்நாட்டரசுக்கு நினைவூட்டி வருகின்றனர்.

நன்றி மறவா அச் சான்றோர்க்கும் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டுவரும் தமிழ் அமைப்புகளுக்கும் மனங்கனிந்த நன்றி.

அங்ஙனம் நிறுவப்படும் நினைவுச்சின்னம் மேலும் தமிழுக்காக உழைக்கவேண்டும் என்னும் உணர்வைத் தூண்டித் துலங்கச்செய்யும். தன்னலமறுப்பும் தமிழ்வீறும் என்றும் நின்றுநிலவ வழிவகுக்கும்.

தமிழ்நாட்டு அரசு ஆவன செய்யவேண்டுகிறோம்.

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு) கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம்

பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

அரசுத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டவிருந்த பேராசிரியர் இலக்குவனாரைக் கைது செய்ய என்ன நியாயம்?

மதுரைக் கூட்டத்தில் தமிழக எதிர்க்கட்சித் துணைத்தலைவர் தமிழவேள் மு.கருணாநிதி கேள்வி

மதுரை மே.3


ஆசிரியருடன் தமிழவேள் மு. கருணாநிதி

நேற்றைய தினம் பேராசிரியர் இலக்குவனாரையும் பாதுகாப்புச் சட்டத்தின் கொடிய கரம் அணைத்துள்ளது. அவர் இப்போது வேலூர்ச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இது என்ன நியாயமோ தெரியவில்லை.அவர் என்ன தவறு செய்தார்? இந்த அரசை எதிர்த்துக் கிளர்ச்சியோ போராட்டமோ ஆரம்பிக்க யாரையாவது தூண்டினாரா? கல்லூரிகளில் தமிழைப் பாட மொழியாக்க வேண்டுமென்பதும் தமிழைத் தமிழக ஆட்சிமொழியாக்க வேண்டுமென்பதும் சர்க்காரின் திட்டம்.இந்தத் திட்டத்தை மக்களிடையே தீவிரப் பிரச்சாரம் செய்யும் வகையிலும் மாணவர்களிடையே தமிழைப் பாட மொழியாக்க ஆதரவு திரட்டும் வகையிலும் மே 9-ஆம் தேதியன்று தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தார்.அதற்கு முன்னரே இந்த அரசாங்கம் அவரைப் பாதுகாப்புக் கைதியாக்கிவிட்டது.

இந்தச் சர்க்காரின் திட்டத்திற்கு ஆதரவு திரட்டப் புறப்பட இருந்த அவரைக் காவல்கைதியாக்கியது என்ன நீதி?

உதாரணமாக மதுவிலக்குச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.அதைத் தீவிரமாக்கப் பிரச்சாரம் செய்வதைப் போல இலக்குவனாரும் அரசரங்கத் திட்டத்திற்குப் பிரச்சாரம் செய்ய இருந்தார். இப்போது ஆபாசச் சுவரொட்டி எதிர்ப்புச் சட்டம் இருக்கிறது. இருந்தபோதிலும் சர்வோதயச்சங்கத்தினர் ஆபாசச்சுவரொட்டி யை அகற்றக் கோரி மறியல் நடத்தினர். அவர்களது குறிக்கோளை நான் தவறு என்று குறிப்பிடவில்லை.ஆனால் இந்த அரசு அவர்களைக் கைது செய்ததா? அப்படி இருக்க அரசாங்கத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டப் புறப்பட்ட ஒரு தமிழ்ப் பெருமகனைக் கைது செய்தது என்ன நியாயம்/ இந்த அரசாங்கத்திடம் அணுவளவாவது இரக்கம் என்பது இருக்குமானால் உடனே விடுதலை செய்யவேண்டும்.

--'முரசொலி' 5-5-‘65

இலக்குவனாரே தமிழ்! தமிழே இலக்குவனார்

பேரா. கண.சிற்சபேசன்

.இலக்குவனாரைப் பற்றி இன்றளவும் நாம் பேசிப் போற்றுகிறோம் என்றால் அதற்கு அவர் கற்ற கல்வி, அவர் பெற்ற பட்டறிவு, அவரின் உணர்வுகள், அவருடைய மானுடப்பண்பே காரணம். இலக்குவனாரிடம் நான் நெருங்கிப் பழகியுள்ளேன்.அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து தூண்களையும் திருக்குறள் வலியுறுத்துகின்றது. இந்த ஐந்து குணங்களையும் பெற்றவர் இலக்குவனார். ஒருமுறை மதுரையில் இருக்கும் சோழவந்தான் என்ற ஊருக்குத் திருக்குறளின் பெருமை பற்றிப் பேச நானும் இலக்குவனாரோடு சென்றிருந்தேன். நான் நினைத்தேன் எப்படித் திருக்குறளை எளிய மக்களுக்கு எடுத்துரைக்கப் போகிறார் என்று. அவரோ அவர்களின் பாமரத் தமிழ் மூலம் எளிமையாக எடுத்துரைத்தார். அதிலும் ஆழமாகக் கூறினார். நான் வியந்தேன்.

இலக்குவனாரிடம் கொள்கைப் பிடிப்பும், மான உணர்வுமே அவரை இந்நிலைக்கு உயர்த்தியது. ஆனால் பதவி பற்றி இவர் கவலைப்படுவதே இல்லை. இலக்குவனார் எப்படி ஆசிரியரோடும், மாணவர்களோடும் பழகுகிறார் என்பதைப் பார்த்து நானும் அப்பழக்கங்களை கற்றுக் கொண்டேன்.

இலக்குவனார் ஆங்கிலப் புலமை மிக்கவர். தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதியது ஏன் எனக் கேட்டதற்கு, உலகம் முழுதும் பரவிய மொழி ஆங்கிலம். இம்மொழியில் தொல்காப்பியத்தை எழுதினால்தான் உலகக் கவனம் இதன் மீது திரும்பும். தமிழனின் பெருமை உலகறியும்" என்றார். அன்புக்கு கட்டுப்பட்டவர். தளராடை (சிப்பா) அணிந்தும், குப்பாயம் (கோட்டு) அணிந்தும் வருவார். எந்தப் பணியையும் யார் கொடுத்தாலும் மறுக்க மாட்டார். தேர்தல் பணிகளைச் சிறப்பாகச் செய்பவர். இவரோடு பணியாற்றியதே எனக்குப் பெருமையாக உள்ளது.

தமிழ்த்தாயைப்பார்க்கவேண்டும் என்பவர்களுக்கு இலக்குவனார் படத்தைக் காட்டலாம். இலக்குவனாரை மனத்தில் நினைத்து வரைந்தால்தான் தமிழ்த்தாய்ப் படம் வரையமுடியும். இலக்குவனாரே தமிழ்! தமிழே இலக்குவனார்! வாழ்க இலக்குவனாரின் தமிழ்த்தொண்டு.

(14/12/2010-ஆம் நாளில் சென்னை ஒய்.எம்.சி.ஏ.பட்டிமன்றம் நடத்திய இலக்குவனார் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை) நன்றி : நட்பு இணைய இதழ்;

நுண்மாண் நுழைபுலமும் அஃகி அகன்ற அறிவுக்கூர்மையும்
ஆய்வும் திறனும் இணைந்த பேராற்றலைப் பெருமளவில்
பெற்றிருக்கும் பேராசிரியர் இலக்குவனார்,ஓர் அரிய ஆராய்ச்சியாளர்.
அஞ்சாநெஞ்சுடை அருந்தமிழ்க்குரிசில்,நேர்மையின் நிலைக்களன்.
—பேறிஞர் அண்ணா



அறிஞர் அண்ணா*

கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்*

பேராசிரியர் சி.இலக்குவனார்*



என்றென்றும் வழிகாட்டியாக ஏற்றுப் போற்றிய தந்தை பெரியாருடன்

இந்தி எதிர்ப்புப் போரில் சிறைசென்று மீண்ட செந்தமிழ்ச்சிங்கம் இலக்குவனாருக்கு அவரது மாணவர்களும் இலக்கிய ஆர்வலர்களும் நடத்திய
55-ஆம் பிறந்தநாள் விழாவில் அண்ணா பேருரையாற்றும் காட்சி.பேராசிரியரின் இடப்பக்கம் திரு.சிட்டிபாபு வலப்பக்கம் அறிஞர் அ.கி.ப. வழக்கறிஞர் தருமராசு சந்தோசம்





தமது தொல்காப்பிய ஆங்கில ஆய்வேட்டுக்குப் பேராசிரியர் சி.இலக்குவனார் முனைவர் பட்டம் பெற்றமைக்குப் பாராட்டுவிழா.அப்போதைய சட்டப்பேரவைத் தலைவர் பேராசிரியருக்கு இடப்பக்கம் திரு.செல்லபாண்டியன் வலப்பக்கம் அ.கி.ப.(கருமுத்து தி.மாணிக்கவாசகம் உள்ளிட்டோர் படத்தில்)

எஃகுத்தமிழர் இலக்குவனார்

இயற்பெயரிலேயே -1-
இலக்கு உடைய
எஃகுத் தமிழர்
இலக்குவனார் !
அன்னைத் தமிழ்மீது ஆசை வைத்தவர்
அதைக் காப்பதற்கென்றே
மீசைவைத்தார் !
பாவின் திறத்தாலே
பைந்தமிழ் காத்தவர்
பாவேந்தர் !
இவரோ
நாவின் திறத்தாலே
நற்றமிழ் காத்த
நாவேந்தர் !
பிழைக்கத் தமிழ் படித்தோர் உண்டு
தமிழ் படித்துப் பிழைப்பவரும் உண்டு
!இவரோ
தமிழ் தழைக்கத்
தமிழ் படித்த தமிழர் !
தமிழ் தழைக்கவே
தலை நிமிர்ந்த தலைவர் !
வேலை செய்யாமலிருக்க
வேலை தேடுவோர் உண்டு !
இவரோ
வேலை செய்வதற்காகத்
தம் வேலை விட்டவர் !
தமிழ் வேலை செய்யத்
தம்வேலை விட்டவர் !
தமிழைச் சிறை மீட்கத்
தாம் சிறை புகுந்தவர் !


மரங்களுக்குப் பூச்சூட்டி -2-
மகிழ்வது வேர்கள்தான் !
அடித்தளங்களுக்கு ஏது
அடையாள வாரம்?
ஆனால் அனைத்துக்கும்
ஓர் அடையாளம் வழங்குவது
அடித்தளங்கள்தானே?
காதலித்தால் கூட
தமிழ் உணர்வை
நிபந்தனையாக்கும்
காதலர் அவர் !
நலம் உசாவினால் கூட
தமிழ் உணர்வோடு
இருக்கிறீரா? என்றே
நலம் கேட்பவர் அவர் !
ஆதரித்தால் கூட
தமிழ் உணர்வை மட்டுமே
ஆதரிக்க அடம் பிடிப்பவர் அவர் !
மறுக்கப்பட்டு விட்டாலும்
காதல்
மறக்கப்படுவதில்லை;
நினைக்கப்படாவிட்டாலும்
தியாகம் நிராகரிக்கப்படுவதில்லை
மரணம் நம் மடிமீதே கிடக்கிறது;
மரணத்தின் மடியில்தான் மனிதன்
மயங்கிக்கிடக்கிறான்;
மரணமில்லாதது -மரணம்;
மற்றொன்று--புகழ் !
அந்த மாயாத புகழால் மரணத்தை
வென்று இன்றும் இருக்கிறார் இலக்குவனார்
என்றும் இருப்பார் இலக்குவனார் !

புதுக்கவிதைப் போராளி பொன்.செல்வகணபதி

தமிழை இனிமை
என்றனர் பாவலர்கள்
தமிழைப் புகழ் என்றனர்
புலவர்கள்
தமிழைத் தன்மானம்
என்றவர் இலக்குவனார் !
தமிழ் விழிப்புற்றது
பாரதியால்
தமிழ் எழுச்சி பெற்றது
பாரதிதாசனால்
தமிழ் போராடியது
இலக்குவனாரால்
எந்த ஓர் அரசமஞ்சத்திலும்
ஏறத் தகுந்தவர்
எந்த ஓர் அரசும் சாமரம்
வீசுதற்குரியவர்
இருந்தும்
எல்லா அரசுகளும்
இலக்குவனார்க்குச்
சிறையையே திறந்தன !
எல்லா அரசுகளும்
இவர்மீது உறைவாளையே
உருவின !
நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
என்று
தொன்று தமிழருக்கு
நிகழ்ந்தது அனைத்தும்
உணர்ந்த
இந்தத் தொல்காப்பியருக்கு
சிறையும் உறைவாளும்
“மாசில் வீணையும் மாலை
மதியமும்” !

தமிழுக்கு வாய்த்த சரியான
முகவரி
தியாகராசர் கல்லூரி!
பச்சை இலைகளுக்கு
நடுவில் பளிங்குத்
தாமரைப் பூப் போல
தெப்பக்குளமும்
மையமண்டபமும்
அதன்
பாசிபடிந்த படிகளில்
நிலவு வழுக்கி விழும் !
நடுவில் காற்று,தமிழாய் வீச,
உயிர்த்துக்கொண்டு
நிற்கும்
தியாகராசர் கல்லூரி
தமிழ் தன்னை இனிதாய்க்
கேட்டது
எங்கள் வகுப்பறைகளின்
வாசலில் நின்று !
தமிழ் தன்னை அழகாக்கிக்
கொண்டது
எங்கள் தோழமை
வட்டத்தின்
கவிதைக் கண்ணாடிகளில் !
தமிழ் தன்னை
விடுதலையாய் உணர்ந்தது
எங்கள் இலக்குவனாரின்
சொல்லிலும் செயலிலும் !
எங்கள் பெருமை எதிலும்
சிறந்தது
இலக்குவனாரின் மாணவர்
என்பது !

அவர் நெஞ்சில் எரிந்த
விடுதலை நெருப்பின்
பொறிகளுள் ஒன்றைப்
பேனாவில் ஊற்றினேன் !
இன்னும் அணையாமல்
ஊறிக் கொண்டிருக்கிறது !
அந்த நடையின் திருப்பம்
ஒன்றில்தான்
மனித நடையின்
துணிவைக் கற்றேன் !
அந்தப் பார்வையின்
கூர்மை ஒன்றில் தான்
கேள்விகள் தொடங்கும்
நியாயம் தெரிந்தேன் !
அந்த மனிதனின் சொற்கள்
அனைத்திலும்
உரிமை வாழ்வின்
பொருளை உணர்ந்தேன்!
இலக்குவனார்க்குச்
செய்வது இதுதான்
தமிழ்
தமிழர்
தமிழ்நாடு
ஆட்சியில்
உரிமையில்
விடுதலையில் !



புரட்சியில்பூத்தமலர்

பேராசிரியர்க.இந்திரசித்து

இலக்குவனார் தமிழ் மொழியின் எழுச்சிக்கும், ஏற்றத்திற்கும் போராடியபோர்ப்படை மறவர்களின் வரிசையில் முன்னணியில் நின்றவர். கார்ல்மார்க்சு, லெனின், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோருடைய வாழ்க்கை வரலாற்றைப்படிக்கும்போதெல்லாம் ஏற்படும் உணர்ச்சியும், உந்துதலும், வேகமும், வீரமும், கிளர்ச்சியும், கிளர்ந்து எழுவதைப் போன்றே இவருடைய வாழ்க்கைவரலற்றைப் படிக்கும்போதும் தோன்றுகின்றன. 'என்னடா! இப்படியும் ஒரு மனிதன்வாழ்ந்து மறைந்திருக்கிறாரே – அவரை நாம் மறந்திருக்கிறோமே' என்னும்வியப்பும், வேதனையும் ஒருங்கே எழுகின்றன. காவியத் தலைவனாகவே காட்சியளிக்கும் பேராசிரியர் சி.இலக்குவனாரின் வரலாற்றை மறைமலை இலக்குவனார் நிரல்படத் தொகுத்தும், வகுத்தும், ஆய்ந்தும் இந்நூலில் எழுதியுள்ளார்.

தமிழ்மொழிக்காப்புப் போரில் புரட்சி வீரராகப் போராடிய சி.இலக்குவனார்தமிழ்ப்போராசிரியர்கள் தன்மானத்தோடு வாழ்ந்து காட்டவேண்டும் என்பதற்குமுன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். விடாமுயற்சியும், தளரா உழைப்பும் கொண்டு தன்னிகரில்லாப் பேராசிரியராக உயர்ந்து நிற்கிறார்.

கார்ல்மார்ச்சு, தன்னுடைய பொதுவுடைமைக் கருத்துக்களுக்காக செர்மனி, உருசியா, பெல்சியம், இங்கிலாந்து ஆகிய நாடுகள் அவரைத் தம் நாட்டுஎல்லையிலிருந்துதுரத்தி அடித்ததைப் போலவே சி. இலக்குவனாரையும் அவருடையதமிழியல்கொள்கைகளுக்காக ஒவ்வொரு கல்வி நிறுவனமும் துரத்தி அடித்த செய்தியைப் படித்துப் பார்த்து, படித்துப் பார்த்து நெஞ்சம் பதைபதைக்கிறது. விரிந்தமனப்பான்னையின்மை, அறிவியல் பார்வையின்மை,தொலை நோக்கின்மை, மாணவர்நலன்கருதாமை, தன்னலமே பெரிதாகப் பேணுதல் போன்ற இழிகுணங்கள் கொண்ட கயவர்களின் கைகளில் அன்றைய கல்வி நிறுவனங்கள் செயல்பட்டமையைக் கண்டு, அளப்பரிய அவலம்கொண்டு நெஞ்சம் தவிக்கிறது. (கல்வித்துறையில் தொழிற்சங்கங்கள் தோன்றிய இந்நாட்களிலும் இது தொடர்கதையாய்த் தொடர்வதே கண்கூடு).

"பேராசிரியர்இலக்குவனாரைப் போல, பணியாற்றிய இடங்களிலெல்லாம், மாறிமாறிப் பணி நீக்கம்செய்யப்பட்டவர்கள் வேறு எவரும் இலர் எனலாம்" (ப.54) என்னும் கூற்று அன்றையகல்வித்துறை எப்படிப்பட்ட பிற்போக்கு மூடர்களின் கைக் குகைகளுக்குள்அகப்பட்டு, அல்லாடிக் கிடந்தன என்பதைப் பளிச்செனச் சுட்டுகிறது. ஒரு பேராசிரியர் எவ்வளவு இன்னலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால் "துரத்தப்பட்டேன்" என்னும் தலைப்பிலேயே கவிதை படைக்கும் அவலத்திற்கு ஆளாகிஇருக்கவேண்டும்? "புறநெறியில் சென்று பொல்லாங்கு கூறி என்னைத் துரத்தினர். துரத்தப்பட்டதால் அடைந்துள்ள துயரங்கள் எண்ணற்றன. என் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினால்தான் என் உளம் அமைதியுறும் போலிருந்தது. என்னுள்ளொலி இம்மறவழிச் செயலை மக்கள் மன்றில் முறையிடப் பணித்தது. அதன் விளைவே இந்நூல்" (ப.55) என்று இந்நூல் தோன்றியதற்கான காரணத்தை பேராசிரியர் சி.இலக்குவனார்கூறியுள்ளார்.(பேரா.மறைமலை இலக்குவனார் எழுதி சாதித்ய அகாதமி வெளியீடாக வந்துள்ள ''இந்திய இலக்கியச்சிற்பிகள் வரிசையில் 'இலக்குவனார்'' நூல் குறித்து எழுதியவற்றுள் ஒரு பகுதி)

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் வாழ்த்து

கம்பன் அடிபரவும் கன்னித் தமிழ்த்தாயே!
ஐம்பத்தைந் தாண்டை அடைந்துவிட்ட--எம்புலவன்
செல்வம் இலக்குவனார் சீரெலாம் பெற்றுலகிற்
பல்லாண்டு வாழக்கண் பார்.
தொல்காப்பிய முதல் தொன்னூல்கள் பற்பலவும்
பல்கால் பயின்று பயன்சுரப்பான் - வெல்காலப்
பைந்தமிழி லார்க்க, இலக்குவனார்; பாருலகில்
சந்ததமும் வாழ்க தழைத்து

கவியோகி சுத்தானந்த பாரதி பாராட்டு

அலக்கண் வரினும் கலக்க மின்றி
செந்தமிழ்க் கொடியை முந்துறத் தாங்கி
தன்மானத்தைப் பொன்னெனக் காத்த
நுண்மாண் புலவர்:நூல்பல பயின்று
நன்மாணவரை நன்று பயிற்றி
வீரத் தமிழர்: வெற்றிப் படையை
ஊக்கிய செம்மல்: உள்ளத் துடிப்பெலாம்
நந்தமிழ் வாழ்கென நடக்கும் புரவலர்:
இலக்குவனாரின் இலக்கணச் சிறப்பும்
தனித்தமிழ் கொஞ்சும் இனித்த நடையும்
நிமிர்ந்த வீறும் அமைந்த சீரும்
எண்ணி யெண்ணி ஏத்திடு வோமே!



>>>>>

சிங்கப்பூரில் கோ. சா. அவர்களுடன்

>>>>>







இ-வ: கவிஞரேறு அமலதாசன், லயன் மாணிக்கம், தமிழவேள் கோ.சா., பேரா. சி. இலக்குவனார், திருக்குறட்பாவலர் முல்லைவாணன் – நண்பர்.